மாலை மலர் 25 AUG 2025



குமாரபாளையம் அருகே

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

## மாவட்ட கலெக்டர் துர்காமூர்த்தி பங்கேற்பு

குமாரபாளையம், ஆக.25—

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் அருகே உள்ள குப்பாண்டபாளையம் ஊராட்சி பகுதியை சேர்ந்த குள்ள நாயக்கன்பாளையம் அரசு பள்ளியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் அனைத்து துறை அதிகாரிகளும் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்று கொண்டனர்.

இந்த முகாமில் கலெக்டர் துர்கா மூர்த்தி பங்கேற்று பயனாளிகள் 3 நபர்களுக்கு பட்டாவும், 8 நபர்களுக்கு ரேஷன் கார்டு பெயர் மாற்றம் போன்ற நலத்திட்ட உத்தரவுகளை வழங்கினார். இந்த முகாமில் 565 மகளிர் உதவித்தொகை விண்ணப்பங்கள் பெறப்பட்டது. முகாமில் மாவட்ட வழங்கல் அலுவலர் முருகேசன், குமாரபாளையம் தாசில்தார் சிவகுமார், குமாரபாளையம் சமூக பாதுகாப்பு தனி தாசில்தார் மாதேஸ்வரி உட்பட பலர் பங்கேற்றனர்.

தினகரன் 26 AUG 2025

காரைக்குறிச்சி ஊராட்சியில்

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் நலத்திட்ட உதவிகள்



▶ காரைக்குறிச்சி ஊராட்சியில் நடந்த உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை ராஜேஸ்குமார் எம்பி வழங்கினார்.

## ராஜேஸ்குமார் எம்பி வழங்கினார்

சேந்தமங்கலம், ஆக.26: புதுச்சத்திரம் அடுத்த காரைக்குறிச்சி ஊராட்சியில் நடந்த உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை ராஜேஸ்குமார் எம்பி வழங்கினார்.

புதுச்சத்திரம் ஒன்றியம், காரைக்குறிச்சி ஊராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நேற்று நடந்தது. முகாமில் காரைக்குறிச்சி புதூர், காரைக்குறிச்சி ஊராட்சியை சேர்ந்த பொதுமக்கள் இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் உதவித்தொகை, மின் இணைப்பு பெயர் மாற்றம், நிலம் அளவீடு செய்தல், புதிய குடிநீர் குழாய், கலைஞர் கனவு இல்லம் வீடு, விதவை உதவித்தொகை, மகளிர் உரிமைத்தொகை, பட்டா மாறுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை வழங்கினர். உடனடியாக மனுக்கள் மீது விசாரணை மேற்கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடந்தது. விழாவிற்கு வட்டார அட்மா குழு துணைத்தலைவர் ஜெயபிரகாஷ் தலைமை வகித்தார்.

வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முத்துலட்சுமி, சுதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் ராஜேஸ்குமார் எம்பி கலந்துகொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார்.

விழாவில் தாசில்தார் மோகன்ராஜ், வட்டார அட்மா குழு தலைவர் கௌதம், வேளாண்மை உதவி இயக்குனர் உமா மகேஸ்வரி, துணை வேளாண் அலுவலர் கோவிந்தசாமி, ஊராட்சி செயலாளர்கள் முருகேசன், சேகர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தினகரன் 27 AUG 2025

நாமகிரிப்பேட்டையில்

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம்



நாமகிரிப்பேட்டை பேரூராட்சியில் நடைபெற்ற முகாமில், அமைச்சர் மதிவேந்தன் பயனாளிகளுக்கு உடனடியாக ஆணைகள் வழங்கினார்.

நாமகிரிப்பேட்டை, ஆக.27: நாமகிரிப்பேட்டை பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெற்றது. முகாமில் அமைச்சர் மதிவேந்தன் கலந்து கொண்டு பொதுமக்கள் வழங்கிய மனுக்களை பரிசிலனை செய்து, தகுதியுள்ள நபர்களுக்கு உடனடியாக ஆணைகள் வழங்கினார். மேலும் அரசின் சிறப்பு திட்டங்கள் குறித்தும், நான்கு ஆண்டு

## அமைச்சர் பங்கேற்பு

சாதனைகள் குறித்தும் பொதுமக்களிடம் பேசினார். இதில் 800க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டு மகளிர் உரிமைத் தொகை, முதியோர் தொகை, விதவை சான்று, வாரிசு சான்று, பட்டா மாற்றம், வீட்டுமனை பட்டா, புதிய ரேஷன் கார்டு, பிறப்பு, இறப்பு, வாரிசு சான்றுகள், ஆவணங்களில் பெயர் திருத்தம், பட்டா, சிட்டா உள்ளிட்ட மனுக்களை துறை அலுவலர்களிடம் வழங்கினர். இதில் தகுதியுள்ள மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டது .இம்முகாமில் பேரூராட்சி தலைவர் சேரன், அன்பழகன், செயல் அலுவலர் ஆறுமுகம் மற்றும் கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் 29 AUG 2025

# எருமப்பட்டியில் நாளை உங்களுடன் ஸ்டாலின் முகாம்

**எருமப்பட்டி, ஆக. 29**

எருமப்பட்டி டவுன் பஞ்., பழனி நகரில், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நாளை நடக்கிறது. முகாமில் கலெக்டர் துர்காமூர்த்தி, எம்.பி.,–எம்.எல்.ஏ.,க்கள் கலந்து கொண்டு பொது மக்களிடம் புகார் மனுக்களை வாங்கு கின்றனர். எனவே, எருமப்பட்டி டவுன் பஞ்., மற்றும் அதை சுற்றியுள்ள மக்கள் முகாமில் கலந்து கொண்டு மகளிர் உரிமை தொகை, கலைஞர் கனவு இல்லம், முதியோர் உதவித் தொகை கேட்பது உள்ளிட்ட பல்வேறு புகார் மனுக்களை கொடுக்கலாம் என செயல் அலு வலர் நாகேஷ் தெரிவித்தார்.

தினகரன் 28 AUG 2025

### உங்களுடன் ஸ்டாலின் திட்ட

# 5ம் கட்ட முகாமில் குவிந்த 350 மனுக்கள்



பள்ளிபாளையம் நகராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட 5ம் கட்ட முகாம் நடைபெற்றது.

பள்ளிபாளையம், ஆக.28: உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட ஐந்தாம் கட்ட முகாமில் 350 பேர் கோரிக்கை மனு அளித்தனர்.

பள்ளிபாளையம் நகராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது. நகராட்சி ஆணையாளர் தயாளன் முகாமை துவக்கி வைத்தார். தமிழக அரசின் வருவாய், நகராட்சி, கூட்டுறவு, வேளாண்மைத் துறை உள்ளிட்ட 13 துறைகளின் அதிகாரிகள் முகாமில் பங்கேற்று, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றனர். பிறப்பு சான்றிதழ், ஆதார் பெயர் மாற்றம், மாற்றுத் திறனாளிக்கான அடையாள அட்டை, காப்பீட்டு அட்டை உள்ளிட்ட 35 மனுக்கள் மீது உடனடி தீர்வு காணப்பட்டது. முகாமில் 35 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. உரிய விசாரணைக்கு பிறகு அனைத்து மனுக்கள் மீதும் தீர்வுகாணப்படுமென உறுதியளிக்கப்பட்டது. முகாமில், நகர திமுக செயலாளர் குமார், முன்னாள் நகர செயலாளர் ரவிச்சந்திரன், நகர மன்ற தலைவர் செல்வராஜ், கட்சி நிர்வாகிகள், கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்.